உ

ஓம் சக்தி துணை

# துர்க்கா மஞ்சரி


"முக்கண்ணியை தொழுவார்க்கு ஒருதீங்கில்லை"

அபிராமி பட்டர்

சித்திரபானு வருடம் ஆடி 1ம் திகதி வள்ளுவர் ஆண்டு 2033 (16-07-2002)


வெளியீட்டாளர்

அருள்மிகு துர்க்காதேவி இந்து தேவஸ்தானம்



மலர்: 3 இதழ்: 2

7468 EDMONDS STREET, BURNABY, B.C. V3N 1B2. TEL: (604) 521-3472



திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை

## ஆலயமும் நாமும்

இன்னுமொரு மலர்மூலம் எங்களது எண்ணங்களை தங்களுடன் பகிர்ந்து கொள்ளுவதில் நாம் பெருமையடைகிறோம். ஒளிவுமறைவற்ற நேர்த்தியான முறையில் திட்டமிட்டு இயங்கும் நிர்வாகம், அம்பிகை அடியார்களின் அயாராத தொண்டு இவையெல்லாம் எமது ஆலய வளர்ச்சிக்கு ஒருவகையில் உதவியிருக்கலாம். ஆனால் ஆழமாக சிந்தித்து பார்போமேயானால் எமக்கு மேலான சக்தி ஒன்று எம்மை வழிநடத்திக் கொண்டிருப்பது எமக்கு புலனாகும். இந்த மஞ்சரிக்கு தமது ஆக்கங்களை தந்த அன்பர்கள் அடியார்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆலய வருடாந்த உற்சவம் *27-07-2002ல்* தொடங்கியுள்ளது வழமைபோல் பூச்சு வேலைப்பாடுகளிலும், திருப்பணி வேலைகளிலும் அம்பிகை அடியார்கள் தொண்டில் ஈடுபட்டனர். அதிலும் சிறப்பான அம்சம் என்னவென்றால் மூன்று தெய்வங்களுடைய இருக்கை முகப்புக்கு வர்ணம் பூசுவதில் ஈடுபட்டிருந்தனர் இரண்டு இளையவர்கள். அவர்களுடைய ஊக்கத்தை நாம் பாராட்ட வேண்டியது எமது கடமையாகும். இதே போல் சிறுவர்கள் ஏனைய திருப்பணி தொண்டில் ஈடுபடுகின்றனர். இத்திருப்ணியில் ஈடுபட்டவர்களுக்கும் பூச்சுக்களை நன்கொடை செய்தவர்களுக்கும் நிர்வாகம் தனது நன்றியை தெரிவிக்கிறது.

எமது ஆலயம் கடந்தமாதம் ஸ்தூபி, சிம்மம், பலிபீடம் என்பன ஸ்தாபன அபிசேகம் செய்யபெற்றதன மூலம் பூரணத்துவம்பெற்ற ஆலயமாக விளங்குகிறது. இம்முறை திருவிழாக்களில் கூடுதலான அடியார்களை சேர்த்துக்கொள்ளுவதென நிரவாகம் தீர்மானித்துள்ளது. எமது முன்னோர் காட்டிய வழிக்கமைய ஒருசமூகத்தை சேர்ந்வர்கள் ஒன்று கூடி பெரும் விழாக்களை செய்வதன் மூலம் எமது சமூக ஒற்றுமையை பேணிக்காத்திடவே நாம் இவ்வாறு செய்தோம். துர்க்கை அம்மன் ஆலயம் பொது மக்கள் ஆலயமாக ஆக்கப்பட்டதன் பின்னர் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியடைந்து கொண்டு வருகிறது. பக்தர்கள் பெருகிவரும் இக்கால கட்டத்தில் அவர்களுக்கும் இப்படியான திருவிழாக்களில் பங்குகொள்ள விருப்பம் இருக்கும். இப்படி கலந்துசெய்ய விரும்பும் அடியவர்களை சேர்ப்பதன் மூலம் அவர்களுக்கும் அம்பிகையின் அருட்கடாட்சம் கிடைக்க நாம் வழி செய்கிறோம்.

ஆலயத்தில் அங்கத்தவராக சேர்ந்து மாதா மாதம் சந்தா பணம் செலுத்திக் கொண்டிருப்பவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிக்கும் அதே நேரத்தில் அங்கத்தவராக சேராதவர்கள் சேர்வதன் மூலம் அல்லது சந்தாப்பணம் செலுத்தி இடையில் விட்டவர்கள் தமது சந்தா பணத்தை செலுத்துவதன் மூலம் ஆலயத்துக்கு நிதியுதவி செய்ய வேண்டுகிறோம். நாம் ஆலயம் ஆரம்பிக்கும் பொழுது அதற்கு வேண்டிய நிதியை வட்டியில்லாக் கடனாக அம்பிகை அடியார்களிடம் வாங்கியருந்தோம். அதில் சிறுதொகை இன்னும் திருப்பித் செலுத்தப்படாமல் இருப்பதனால் அந்த நிதியைத் திரட்டும் விதத்தில் ஆலயத்தில் காணிப்பங்குகளை அடியார்களுக்கு பகிர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம், ஒரு பங்கை 250.00 டொலாகள் கொடுத்து பெற்றுக்கொள்வதன் மூலம் உங்கள் பெயர்களை ஆலயத்தில் பதிவு செய்து உங்கள் சந்ததியினருக்கு நீங்கள் வழிகாட்டியாக இருப்பீர்கள்.

எமது ஆலயத்தில் தினம் தோறும் இரண்டு நேரப் பூசையும் விசேட தினங்களில் அபிசேகங்கள் என்பன நடைபெறுகிறது. அம்பிகை அடியவர்கள் தாங்களும் விசேட அபிசேகங்களை செய்ய விரும்பின் ஆலயநிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும். பிரதி ஞாயிறு தோறும் தமிழ் சமய, வகுப்புக்களும் அத்தோடு யோக வகுப்புக்களும் நடைபெறுகிறது. இந்த வகுப்புக்களுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பி தமிழ் சமய அறிவையும் யோக முறைறையும் உங்கள் பிள்ளைகளுக்கு ஊட்டவும். ஆலயத்தில் இயங்கும் நூல் நிலையத்தில் நீங்கள் விரும்பும் ஆன்மீக நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அதேசமயம் உங்களிடம் தரமான நூல்கள் இருந்தால் நூல்நிலைய வளர்ச்சிக்கு உதவும் வகையில் அன்பளிப்பு செய்யலாம்.

சமயக்குரவர்களில் சரியைத் தொண்டு (உழவாரத்தொண்டு) செய்து எமக்கு வழிகாட்டிய அப்பர் பெருமானின் வழியில் சரியைத்தொண்டு செய்ய எத்தனையோ தொண்டர்கள், இன்று ஆலயத்தின் திருப்பணித் தேவைகளை பூர்த்தி செய்ய முன்வந்து, மனநிறைவும் ஆன்ம ஈடேற்றமும் பெறுகிறார்கள். ஆலயத் தொண்டில் ஈடுபட அன்னை தரும் அரிய சந்தர்பத்தை பயன்படுத்தி இல்வாழ்வில் பயன்பெற விரும்பும் அடியார்கள் நிர்வாகத்துடன் தொடர்புகொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

## பக்தியொடு பரவிநின்றால்............

வானுயர்ந்த வெண்சிகரம் வனப்புறுவன் கூவர்தனில்
தானுயர்ந்த அழகுநகர் எனத்திகழும் பேணபிசேர்
கானுயர்ந்த கனடாவை காக்குந்தாய் துர்க்கையினைத்
தேனுயர்ந்த தமிழ்ப்பாவால் துதிப்பதுவும் திகட்டுவதோ

ஆண்டுதான் மூன்றெனிலும் அமாந்தபதி இன்றளவில்
பூண்டதோர் கலையழகும் புகழ்சேர்க்கும் ஒழுங்கமைவும்
யாண்டுமிலா நல்வழக்காய் நற்கருத்துச் சஞ்சிகையும்
ஈண்டமைய அருள்சுரந்த எம்தாயே சரணமம்மா

வீரத்தின் விளைநிலமே வேண்டுமடி யவர்கள்மனப்
பாரத்தை தீர்த்தருளும் பாசத்தாய் பவனிவரத்
தேரைத்தான் சிலநாளில் திகழவைத்த அற்புதத்தை
ஓரத்தான் முடிந்திடுமோ உன்னருளே கதியன்றோ

வெள்ளிமலை சூழ்பதியில் வெள்ளிதொறும் வீதியுலா
துள்ளியெழும் ஆணவத்தைத் துடைத்தெறியும் பிராத்தனைகள்
அள்ளியுண வளித்தடியார் பசிபோக்கும் தானங்கள்
தெள்ளுதமிழ் சஞ்சிகையும் தேவியுன்றன் அருட்கொடையே

நித்தமுந்தன் நற்பதியை நாடிவரும் நின்னடியார்
சித்தமெலாம் அருள்பரவச் சிலநிமிடம் மௌனித்து
எத்தகைய துர்க்குணமும் எட்டவொண்ணா நல்லமைதி
மெத்தமைய வழிசமைத்த மேதினியார் தாள்பணிவோம்

சக்தியவள் அருளின்றிச் சகமதுவும் இயங்குவதோ
பக்தியுளார் பார்வதியாம் லட்சுமியாய் சரஸ்வதியாய்
வக்கிரம்சேர் அம்பாளாய் வகைபலவாய் தழைத்திடினும்
பக்தியொடு பரவிநின்றால் பாய்ந்துவரும் அவளருளே

அன்னைபரா சக்தியவள் அமர்ந்தபேர் ணபிவாழ்க
வன்னமிக அழகொழிரும் வளர்கோவில் மிகவாழ்க
பொன்னகராம் வன்கூவர் வாழ்மக்கள் புகழ்வாழ்க
கன்னலென முகிழ்ந்துவரும் மஞ்சரியும் வாழ்கநன்றே

ஆக்கம்: சைவப்புலவர். ஐ. விநாயகமூர்த்தி

(கரவை விநாயகன்)
சுவிஸ் நாட்டிலிருந்து

# என்ன கொண்டு வந்தாய்....

மக்கள் செய்கின்ற வினைக்கு ஏற்ப பிறப்பெடுத்து அவ்வினையை நுகருதல் எமது சைவசித்தாந்தம் கண்டு பிடித்த முடிவாகும். ஆணவமலம் உயிர்கள் இடத்தே அநாதி தொட்டே படிந்து இருக்கின்றதொன்று. இதனால் இதனை சகமலம் என்று சொல்லுவார்கள். வினையை அறுப்பதென்பது இலகுவானதொன்றல்ல. இந்த உயிர் சிவனொடு ஒன்றுதல் என்பதும் அவ்வளவு இலகுவானதொன்றல்ல. எத்தனையோ கோடி காலமாக ஆத்மா பிறந்து இறந்து வருகிறது ஆனாலும் பிறந்து இறந்து தேய்ந்து போகும் உயிர் சமய நிலையில் நின்று ஒழுகும் போது இறைவனிடம் செல்லும் என்பது ஞானிகள் கண்ட உண்மை.

"ஒன்றும் இரண்டும் இலதுமாய் ஒன்றாக நின்று சமய நிராகரம்
நீங்கியே நின்று பராபரை நேயத்தைப் பாதத்தால் சென்று
சிவமாதல் சித்தாந்த சித்தியே" - என்று உயிர், இறைவன் இரண்டும் ஒன்றாகும் தன்மையை விளக்குவார் திருமூலர். அதேபோல இளங்கோவடிகள் செய்த சிலப்பதிகாரமும் உயிர் செய்த வினையை கட்டாயம் அனுபவித்தேதான் ஆகவேண்டும், அதில் இருந்து தப்ப முடியாது என்பதனை நூல் எங்கணும் விதைத்துக் காட்டியுள்ளார். பல கிளைக் கதைகளை சிலப்பதிகாரத்திலே உருவாக்கி அந்த கிளைக்கதைகளின் பாத்திரங்களை எல்லாம் வினையின் வழி மூலக்கதா பாத்திரங்களான கண்ணகி கோவலனோடு பிணைத்துக் காட்டியுள்ளமை ஊழ்வினை வந்துருட்டும் என்றும் சிலப்பதிகார நூற் கருத்துக்கு வலுவாக அரண் சேர்க்கின்றது.

தெய்வத்தன்மை பெற்ற கண்ணகி மீண்டும் பிறப்பு எடுக்கின்ற தன்மை மணிமேகலையில் காணப்படுகின்றது.

"சீற்றங் கொண்டு செழுநகர் சிதைத்தேன் மேற்செய் நல்வினையின் விண்ணவர்ச் சென்றேன் அவ்வினை இறுதியின், அடுசினப் பாவம் எவ்வகை யானும் எய்துதல் ஒழியாது; உம்ப ரில்வழி இம்பரில் பல் பிறப்பு யாங்கணும் இருவினை உய்த்து; உமைபோல் நீங்கரும் பிறவிக் கடலிடை நீந்திப் பிறந்தும் இறந்தும் உழல்வோம்"

என்று கண்ணகி தன் மகளான மணிமேகலைக்கு தன் மறுபிறப்பு வருதலை காட்டுகிறார். இதன் மூலம் கண்ணகியின் தெய்வ வடிவம் சில காலம் வரைதான் நின்று நிலவியது என்பதனையும், பின் மானிட ரூபம் பெற்று நிலவுலகில் வாழ்ந்தாள் என்பதும் பின் மானிடப் பிறவிக்கே உரித்தான துன்பத்தை அடைந்தாள் என்பதும், பின் எண்ணிலி கோடி ஆண்டின் பின் பிறவி அற்ற நிலை எய்தினாள் என்பதும் பெறப்படும். இவைகள் எங்களின் மனத்தின் பக்குவத்திற்கு ஏற்ப தத்துவ நிலையில் நின்று உணரப்பட வேண்டிய உண்மைகள் ஆகும்.

தெய்வத்தன்மை பெற்ற கண்ணகிக்கே இந்நிலை என்றால் சாதாரணமான எங்களின் ஆத்மாவின் நிலை என்ன என்பதனை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த உலகம் பொய் என்பதும் நாம் எங்களுடையது என்று உடைமைப் பொருளில் ஆசை வைத்திருப்பது எல்லாம் பொய் என்றும் நாம் நினைத்தால் பிறவி அறுக்க வழியுண்டு.

"எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்"

இதுவே உலக நியதியும் எனது படைப்பின் சாராம்சமும் ஆகும் என்னும் கீதைக் கருத்தினை நாம் மறவாது கடைப்பிடித்தால் பிறப்பு இறப்பு என்ற கொடுஞ் சுழியில் இருந்து தப்பலாம்.

வடிவேலு ஞானகாந்தன்

## நீங்களும் தெரிந்து கொள்ள

திருப்பதி: நிறையப் பணம் உண்டியலில் போடுகிறார்கள்

பழநி: காவடி

இராமேசுவரம்: கங்கா தீர்த்தம்

அம்பலப்புழை: பாயச நிவேதனம்

வைக்கம்: சமாராதனை

கிருஷ்ணபகவானுடைய சேஷத்திரம் ஒன்று: அருகிலுள்ள நதியில் வள்ளம் ஓட்டும் போட்டி மூலம் ஆராதனை

ஏத்துமானூர்: திருப்பதி போல தேஷ்டமாகத் தனத்தினால் ஆராதனை செய்வர்

ஆராதிப்பர். நான் இவ்வளவு வெடி வெடிக்கிறேன் என்று நேர்த்திக்கடன் செய்து கொண்டு வெடிக்கிறார். மங்களகரமான சப்தம் மகாதோஷம். (மேற்குச் சமுத்திரக்கரைத்தலம்)

திருச்சூர்: திருச் சிவப்பேரூர் - விருஷபாசலம்

பேரூர்: ஆதி சிதம்பரம்

அவரோதம்: கேஸிலில் பட்டம் கட்டுதல் ராஜஸ்திரீகருடைய அந்தப்புரத்துக்கும் அவரோதம் என்று பெயர். திருச்சூர் கோயிலில் பூசை செய்கிறவர்களுக்கும் அவரோதம் என்று பெயர்.

ஆத்மசோதி நா. முத்தையா

# அறிவுக்கு விருந்து

கபடதாரியே, முதலில் உமது கண்ணில் உள்ள உத்தரத்தை அகற்றியெறியவும். அதன் பின்னர் உமது உடன்பிறப்பின் கண்ணில் உள்ள தூசியை அகற்ற உம்மால் தெளிவாகப் பார்க்க இயலும்.
(இயேசுநாதர்)

அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சுபவர்கள், அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சாதவர்கள் ஆகியோர் தவறான கொள்கைகளைக் தழுவித் தீயபாதையில் செல்கிறார்கள் என்று பொருள். இரும்பிலிருந்தே துரு தோன்றினாலும் இரும்பை அந்த துருவே அரித்துத் தின்றுவிடுகிறது. அது போலவே அறநெறியில் இருந்து தவறியவனை அவனுடைய செயல்களே நாளுக்கு நாள் அழிவை நோக்கி நடத்திச் செல்கின்றன.

(புத்தர்)

இரவுக்குப் பின் பகலும், காலைக்குப் பின் மாலையும், குளிர்காலத்திற்குப் பின் வசந்தமும் மாறி மாறி வருகின்றன. காலம் விளையாடல் புரிகின்றது. ஆயுள் தேய்ந்து கொண்டே வருகிறது. அப்படியிருந்தும் வீண் ஆவல்கள் மட்டும் நம்மைவிட்டுப் போவதில்லை.

மனம் அலையாதிருக்கவும் மெய்ப்பொருளின் மீது சிந்தை நிலைத்து நிற்கவும் சுவாசத்தை ஒழுங்காக்க வேண்டும். புலன்களைக் காக்க வேண்டும். ஜபமும் பிரார்த்தனையும் செய்ய வேண்டும்
(ஆதிசங்கரர்)

தொகுப்பு:- இணுவைக் குமரன்

## பெரியவரின் அறிவுரையால் மனம் மாறிய இராமு

இராமுவுக்கு நீண்ட நாட்களாக ஒரு ஆசை. எல்லோரும் வெளிநாட்டுக்குச் செல்கின்றார்களே அவர்கள் திரும்பி வரும்போது அவர்களை எவ்வளவு கௌரவிக்கிறார்கள். நானுந்தான் ஒருமுறை போய் வந்தால் என்ன? அந்த ஆசை கொழுந்துவிட்டு எரிந்து கொண்டே இருந்தது. வெளிநாடு என்றால் சும்மாவா? கனடாவுக்கு அகதியாகப் போவதென்றால் ஒன்றேகால் லட்சம் வேண்டும். மேற்கு ஜேர்மனிக்குப் போவதென்றால் அதில் பாதியாவது வேண்டும். இத்தொகையை நினைக்கவே இராமுவுக்கு அடிவயிற்றைக் கலக்கியது. என்றாலும் ஆசை அடிமனதில் இருந்து அரித்துக் கொண்டே இருந்தது.

வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி மேற்கு ஜேர்மனிக்குச் செல்வதற்கு அரைவாசிப் பணத்தைச் சேர்த்துவிட்டான். மற்றதற்கு யாரிடமாவது கடனைப்பட்டுச் செல்வதாகத் தீர்மானித்தான். அந்த ஊரில் ஒரு பரோபகாரி இராமுவுக்கு வட்டி இல்லாமல் கடன் கொடுக்கச் சம்மதித்தார். இராமுவுக்கு தலைகால் தெரியாத சந்தோஷம். வெளிநாடு செல்வதற்காக வேண்டிய ஆயத்தங்கள் யாவும் செய்யப்பட்டன. புறப்படுவதற்கு முதல் நாள் பரோபகாரியிடம் சென்று ஆசியும் பெற்றுக் கொண்டான். இராமு அன்று சாயங்காலம் தனது விவசாய நிலத்தைச் சுற்றிப் பார்க்கச் சென்றான். அங்கே ஒரு காட்சியைக் கண்டான். ஒரு நொண்டிக் குருவி ஒரு மரக்கிளையில் இருக்கிறது. நல்ல குருவி ஒன்று எங்கிருந்தோ உணவு தேடிக் கொண்டு வந்து ஊட்டுகின்றது. அது ஊட்ட ஊட்ட இது தின்று கொண்டே இருக்கிறது. இதனை உற்றுப் பார்த்துக் கொண்டே வெகுநேரம் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டான். இருட்டியதே அவனுக்குத் தெரியவில்லை. இந்த நொண்டிக் குருவிக்கே ஆண்டவன் உணவளிக்கும் போது என்னையா கைவிட்டு விடுவான். கல்லினுட் தேரைக்கும் கருப்பையில் முட்டைக்கும் யார் உணவளிக்கிறார்கள்? அதே ஆண்டவன் எனக்கா உணவளிக்க மறுத்து விடுவான்? இராமுவின் மனம் மாறிவிட்டது. எத்தனை நாட்கள் வெளிநாட்டுப் பயணத்தைப் பற்றிச் சிந்தித்துச் சிந்தித்துக் கனவு கண்டவன் இவ்வளவு சுலபமாக மனம் மாறிவிடுவான் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

அடுத்த நாள் இராமு பரோபகாரியின் வீட்டுக்குச் சென்றான். பரோபகாரி மகிழ்வுடனும் ஆச்சரியத்துடனும் வரவேற்றார். என்ன இராமு இன்று கொழும்பு போகவில்லையா? என்று பரோபகாரி கேட்டார். நான் வெளிநாட்டுக்கே செல்வதில்லை என்று தீர்மானித்து உங்கள் பணத்தைத் திருப்பித்தர வந்திருக்கிறேன் என்றான் இராமு. இந்த மறுமொழி பரோபகாரிக்கு ஆச்சரியத்தின்

மேல் ஆச்சரியமாக இருந்தது. என்ன காரணம் என்று கேட்டார் பரோபகாரி. நொண்டிக் குருவி தனது மனதை மாற்றிய சம்பவத்தைக் கூறினான் இராமு. பரோபகாரி சிரித்துவிட்டு ஏன் இராமு நீ நொண்டிக் குருவியைப் பற்றித்தானே சிந்தித்தாய்? ஏன் நல்ல குருவியைப் போல வாழக்கூடாது? நல்ல குருவி பாடுபட்டு இரை தேடி தானும் உண்டு நொண்டிக் குருவியையும் காப்பாற்றுகிறது அதுபோலும் நீயும் பாடுபட்டுச் சம்பாதித்து நீயும் உண்டு மற்றவர்களுக்கும் ஏன் பரோபகாரியாக வாழக்கூடாது என்று கேட்டார் அந்தப் பெரியவர். பெரியவரின் இந்த வார்த்தைகள் இராமுவின் கண்களைத் திறந்துவிட்டன.

பெரியவரின் வார்த்தைகளை இராமுவால் மறுத்துப் பேச முடியவில்லை. கொடுக்க கொண்டு வந்த பணத்தைத் திருப்பிக் கொண்டு சென்றான். குறிப்பிட்ட பிரகாரம் அன்று மாலையே வெளிநாடு சென்றான். மாதந்தோறும் பெரியவருக்கே பணத்தை அனுப்பிவைத்தான். அவ்வூர் வாசிகசாலைக்கு ஒரு தொகை கொடுத்தான். நான்கு ஏழைக் குழந்தைகளுக்குக் கற்பதற்கு வேண்டிய செலவு முழுவதையும்ஏற்றுக்கொண்டான். ஒரு தும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்தி ஐம்பது பேருக்கு வேலை கொடுத்தான். இப்பொழுது அந்த ஊரில் இராமு ஒரு பரோபகாரி.

## பிள்ளைப்பாசம்

சிவபுரம் ஒரு அழகான ஊர். சுந்தரம் அந்த ஊரில்தான் நீதிபதியாக இருந்தார். அவருக்குப் பிழை செய்கிறவர்களைக் கண்டால் பொறுக்காது. சிறியகுற்றங்களுக்கெல்லாம் பெரிய தண்டணை விதித்து வந்தார். இந்தச் சிறிய குற்றத்திற்கு இந்தப் பெரிய தண்டனையா என்று பொதுமக்களும் சட்டத்தரணிமாரும் தமக்குள்ளே பேசிக்கொண்டனர்.

கை பிழைபாடாகச் சிறு குற்றங்கள் செய்வது சர்வசாதாரணம். குற்றவாளி அதனை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கோரினால் குற்றவாளியை எச்சரித்து இனி மேல் இப்படி நிகழ்ந்தால் பெருங்குற்றமாகக் கருதப்படும் என்று ஏனைய நீதிபதிகள் தீர்ப்புக் கூறி அனுப்புதல் மரபு. இந்த நீதிபதியிடம் போவதிலும் பார்க்க வழக்காளியுடன் சமாதானமாகப் போவது மேலெனச் சிலர் நினைப்பதுண்டு.

நீதிபதியின் முகம் எந்த நேரமும் வெடுவெடென்றே இருக்கும். சுடுசுடு என்றே பேசுவார். அவரது முகத்தில் சாந்தம் என்பதே கிடையாது. ஊரவர்கள் எல்லாரும் திட்டியபடியே இருப்பர். இதனால் மக்கள் கோடு பொலிஸ் என்று செல்வது குறைந்து கொண்டே வந்தது.

ஒருமுறை அவரது மகனே கொலைக்குற்றத்திற்காகக் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான். அவன் கொலை செய்தது உறுதியாயிற்று. யூரிமார் ஏகோபித்த தீர்ப்புக் கூறினார் இதனால் நீதிபதி எதுவும் செய்யமுடியவில்லை. தன் மகனுக்குத் தானே தீர்ப்புக் கூறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. திகைப்புற்று அவர் முன்னும் பின்னும் பார்க்கலானார்.

"யூரிமார்களே இந்த இளங்குற்றவாளிக்கு நாம் மரணதண்டனை விதிப்பதால் குற்றவாளி திருந்திவிடுவானா? தூக்குத் தண்டனை அளிப்பது மனிததர்மத்திற்கு ஏற்றதல்ல. இதனால் குற்றவாளி குற்றவாளியாகவே இறக்கிறான். அவன் ஆத்திர ஆவேசத்தில் கொலை செய்துவிட்டான். கொலை செய்யுமாறு தூண்டிய ஆவேசம் தணிந்தபின் அவனது புத்தி தெளிவடையும் தருணத்தில் அவனைத் தூக்குமேடை ஏற்றிக் கொல்லுவது மனிதத்தன்மையையே களங்கப்படுத்துவதாகும்" என்று அவர் தமது அறிவின் திறனைக்காட்டி வாதிக்கலானார்.

யூரிமாரும் சரிதான் சரிதான் என்று தலை ஆட்டினர். அவரது வாதத்திறமை அவ்வளவு திறமையாக அமைந்தது. தமது பேச்சுத்திறனால் யூரிமாருடைய மனதைக் கவர்ந்துவிட்டார். தன் மகன் எதிரில்

நின்றிராவிட்டால் நீதிபதி ஆயுள் முழுவதும் சிறிதும் தயங்காமல் தூக்குத்தண்டனை விதித்த வண்ணமாகவே இருந்திருப்பார். ஆனால் நீதி செத்துவிட்டது. நீதியைப் பிள்ளைப்பாசம் விழுங்கிவிட்டது.

சோழன் மனுவேந்தன் தன் குலத்திற்குரிய ஒரே ஒரு மைந்தனை ஒரு பசுக்கன்றினை தன் மகன் கொன்றதற்காக இழக்கத்துணிந்தானே. அவனது அரசாட்சி நீதியான அரசாட்சி. மனுவேந்தனுடைய நீதிக்குமுன்னால் இந்த நீதிபதியினுடைய நீதி நிலைத்து நிற்கமுடியுமா?

ஆனால் இப்பொழுது தம் பிள்ளைப் பாசத்தினால் இவ்வாறு அவர் பேசலானார். அவரது பேச்சு பிள்ளைப் பாசத்தினால் எழுந்ததே ஒழிய கடமை உணர்வால் அல்ல. இவன் என் பிள்ளை என்ற உடைமை உணர்விலிருந்து இவ்வாதங்கள் எழுந்தன. எனது என்று உரிமை பாராட்டுகின்ற விவகாரம் மிகவும் பொல்லாதது என்பதற்கு இதுவே சாட்சியாகும். எனது என்பது தோன்றிய உடனே நீதிகுழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டது. எனது என்று ஒருவன் உரிமை பாராட்டுகின்ற பொழுது அங்கே அவன் மனோநிலையைப் பார்த்துக் கடவுள் சிரிக்கின்றார். கடவுள் சிரிப்பதை யார் கண்டார்கள்? என்று வாதிடுவார்களே தவிர தமது குற்றத்தை யாரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். தனக்கொரு நியாயம் பிறர்க்கொரு நியாயம் ஆகிவிடுகின்றது.

அர்ச்சுனன் போக்கும் இந்த நீதிபதியின் போக்கைப் போன்றதாகும். கௌரவர் பாண்டவர்கள் இருவரதும் சேனைக்கு நடுவில் கண்ணன் கொண்டு சென்று தேரை நிறுத்தினான். இருபக்கத்திலும் இருப்பவர்களைப் பார்த்தான். ஏதோ ஒருவகையில் அர்ச்சுனனது சொந்தக்காரர்களாகவே காணப்பட்டனர். அவன் எதிரில் அவனது குருமார்களும் உறவினர்களும் நண்பர்களும் நின்றிராவிட்டால் பகைவரின் சிரங்களை வெட்டிப் பந்து போல் வீசியிருப்பான். பாசத்திலிருந்து விளைந்த மோகம் அவனது கடமை உணர்ச்சியைக் கவிந்து கொள்ளுகின்றது.

இந்த மோகத்தை அகற்றி அர்ச்சுனனது அதர்மமாக அமைந்த கடமையை உணர்த்தவே கண்ணன் கீதோபதேசத்தை அருளத்தொடங்கினான். அதர்மத்திற்குத் தடையாயுள்ள மோகத்தை அகற்றுவதற்குப் பிறந்தது கீதை. மோகத்தை அகற்றக் கண்ணனிடம் கீதோபதேசம் கேட்ட பின்பும் அர்ச்சுனனின் மகன் அபிமன்யு இறந்த உடனே மறுபடியும் அர்ச்சுனனுக்கு புத்திர சோகம் வந்துவிடுகிறது. எத்தனையோ பேரை யுத்தத்திலே கொன்ற அர்ச்சுனனுக்கு தனது புத்திரன் இறந்தபின் புத்திர சோகம் கௌவிக்கொண்டு வந்துவிடுகின்றது.

சிறுத்தொண்டரைப் போன்று பிள்ளைப்பாசத்தை வென்றவர் யாருமில்லை என்றே கூறலாம். சிவனடியாரை உண்ணச் செய்வதற்காக பிள்ளைக்கறி சமைத்தார். இந்த மனோநிலை எல்லாருக்கும் உண்டாகாது. சிவனடியாருக்காக எதையும் செய்யும் முறுகிய பக்தி சிறுத்தொண்டரிடம் இருந்தமையே அதற்குக் காரணமாகும்.

ஆக்கம் ஆத்மஜோதி முத்தையா

## குரு பக்தி

திருமுருக கிருபானந்தவாரியார்

பக்தி மூன்று வகைப்படும். ஈஸ்வரனுக்கு நேராகச் செய்யும் பக்தி ஈஸ்வரபக்தி: அடியார்களுக்கு செய்யும் பக்தி அடியார் பக்தி, ஆச்சாரியரிடம் செய்யும் பக்தி குருபக்தி. சுருக்கமாகச் சொன்னால், 1. சிவபக்தி 2. ஜங்கம பக்தி 3. குருபக்தி என்று சொல்வார்கள்.

இந்த மூன்றிலே மிகவும் சிறந்தது குருபக்தி என்ன காரணம் ? என்று சொல்லப் போகிறேன்.

ஆண்டவன் கருணை யாண்டும் நீக்கமற நிறைந்து இருக்கிறது. இந்த இடத்தில்தான் இறைவன் கருணை இருக்கிறது, இவ்விடத்தில் இறைவனுடைய கருணையில்லை என்று கூறமுடியாதபடி, எங்கும் பரந்தும் விரிந்தும் இருக்கிறது. அந்தக் கருணையைப் பெறவேண்டுமானால் ஆச்சாரியர் மூலமாகத்தான் சுலபமாகப் பெறமுடியும். ஒரு சிறிய உதாரணம் சொல்கிறேன்.

120 டிகிரி சுடும் வெயில் அங்கு இந்த வேஸ்டியை வைத்தால் சுடுமே தவிர எரிந்து போகாது. சூரிய காந்தக் கண்ணாடி என்ற ஒன்று உண்டு. அந்த சூரிய காந்த கண்ணாடியை வெயிலில் வைத்து, அதன் கீழ்வருகிற மற்றொரு வெயிலில் வேஷ்டியை வைத்தால் தீ திக்கென்று பத்திக் கொள்ளும். இந்த வெயிலுக்கு வேஷ்டியை கொளுத்துகிற ஆற்றல் கிடையாது. ஆனால் சூரியகாந்தக் கண்ணாடிக்கு கீழ்வரும் வெயில் வேஷ்டியை தகனம் பண்ணிவிடுகிறது. என்ன காரணம் ? ஐம்பதாயிரம் கிரணங்களை தன்பால் ஈர்த்து அனுப்புகிறது சூரிய காந்தக் கண்ணாடி..

நேரக வரும் வெயில் மாதிரி இறைவனைக் குறித்துச் செய்யும் பக்தி..சூரிய காந்தக் கண்ணாடியின் கீழ்வரும் வெயில் மாதிரி குரு பக்தி..

குரு நாதர் பல வருடங்கள் தவம் செய்து இந்தத் திருவருளைச் சேர்த்து வைத்திருக்கிறார். அதனைச் தன் சீடனுக்கு பாய்ச்சிவிடுகிறார். ஆகையால்தான் சிவ பக்தியைக் காட்டிலும் குருபக்தியே சிறந்தது என்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள்.

அருணகிரிநாதர் மிகவும் பெரியவர் அவர் ஐம்பத்தொரு அனுபூதி பாடல்களைப் பாடினார் மந்திர சாத்திரமாக ஐம்பத்தொரு அட்ஷரங்களையும் ஐம்பத்தொரு அனுபூதிகளையும் பாடினார். அதில் கடைசிப் பாட்டு உங்களுக்கு தெரியும்.

“ குருவாய் வருவாய் அருள்வாய் குகனே ! என்று சொல்லுகிறார். ஆண்டவனைக் குருவாக வந்து அருள்செய் என்று செல்லுகிறார்.

மாணிக்க வாசகருக்கு எம்பெருமான் குருநாதராக வந்தார் குருந்த மரநிழலில் திருப்பெருந்துறையில்.. ஆகவே இறைவன் பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்குக் குருநாதனாக வருவார்.

மற்றொன்று ஆச்சாரியனும் நம்மைப் போலத்தான் உண்டு, உடுத்து இருப்பார். இவரை நம்மைப் போல நினைக்கக் கூடாது. எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களிலே தோன்றிய எல்லாப்பிராணிகளும் உண்டு வெளியே வந்தால் மலம் என்று பெயர். ஒரு பிராணி மட்டும் உண்டு கழித்து மலம் என்று பெயரில்லை. அது புனிதமானது எது ? அது பசுவின் சாணம், பூசை வீட்டிலே அதைக் கொண்டு மெழுகுகிறோம். சுவாமிக்கும் பஞ்சகவ்வியமாக அபிஷேகம் பண்ணுகிறோம். இதோ இந்தத் திருநீறு பசுவின் மலத்தால் ஆனது. குழந்தைகள் வெளிக்குப்போனால் பசும் சாணம்தான் போட்டு மெழுகுகிறோம். ஆகையினாலே பிறமலங்களை போக்குவதற்காக அமைந்தது பசுவின் மலம். குரு நாதனுடைய உடம்பு பசுவின் மலம்போல நம்முடைய கருமேனியைச் சுத்திகரிக்க வந்தது குருநாதனின் திருமேனி ஆகவே நம்மைபோலத்தானே அவரும் இருக்கிறார் என்று எண்ணிவிடக்கூடது.

தெய்வத்தினிடத்து செய்த பாவம் ஆச்சாரியாரிடத்தே தீரும். ஆச்சாரியாருக்குச் செய்த பாவம் எங்கும் தீராது அதற்கு முடிவே கிடையாது. ஆகவே சிவபக்தியைக் காட்டிலும் குருபக்தியே உயர்ந்தது. அதற்கு சிறிய உதாரணம் சொல்கிறேன் “ ஆச்சாரியார் ஞானத்தின் சொரூபம், ஞானம் எங்கேயாவது கடையிலே விற்குமா? தங்கத்தை விலைக்கு வாங்கலாம், கார் வாங்கலாம் ஞானத்தை எங்கேயாவது வாங்க முடியுமா? ஞானம் விற்கும் கடை என்ற கடை ஒன்று இருக்கிறதா ஐந்து கண்டத்தில் எங்கேயாவது ஞானம் விற்கிறதா? இல்லை ! அந்த ஞானத்தைக் கொடுப்பவர் குருநாதர்.

துன்பத்திற்கு காரணம் எது? அஞ்ஞானம். இன்பத்திற்கு காரணம் எது? ஞானம். சுருக்கமாகச் சொல்கிறேன். அஞ்ஞானம் இருக்க இருக்க துன்பம் இருக்கும். இத்துன்பம் நீங்க என்ன செய்ய வேண்டும்? அஞ்ஞானத்தைப்போக்க வேண்டும். அஞ்ஞானம், இருள் அது ஞானப்பிரகாசம், ஞானவொளி என்று சொல்லுவார்கள். ஒளி என்ன செய்யும் மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

ஒருவர் இரண்டாவது காட்சியை பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்தார். மின்விளக்கு விட்டிலே எரிகிறது வெளியிலே மின் விளக்கு அணைந்துவிட்டது!. உடனே வீட்டிலும் அணைந்துவிட்டது. தீப்பெட்டி இருக்கும் இடம்தெரியவில்லை என்ன செய்வது? அப்படியே இருக்கவேண்டியது தான், மனைவியிடம் கேட்டார் ஜானகி! தீப்பெட்டி எங்கே? அவரும் நான் பார்க்கவில்லை என்றார்.

அப்பொழுது ஒரு டாச் லைட் இருந்தால் எத்தனை நன்மை உண்டாகும்? அப்படி அஞ்ஞானமான இருளுக்கு ஞான வொளியைக் கொடுப்பவர் குருநாதர். அவர் கைவைத்தால் ஞானம் வந்து விடுகிறது. இராமகிருஷ்ண பரமஹம்சர் விவேகானந்தர் மீது கை வைத்தார். ஞானம் விவேகானந்தருக்கு வந்துவிட்டது.

அப்பா பணம் சேர்த்தார் ஒரு நாள் தன் மகனிடத்தில் சாவி கொடுத்தார். அதேபோல் குருநாதர் ஆயுள் முழுவதும் பாடுபட்டு ஞானத்தைச் சேகரித்து சீடனிடத்தே சுலபமாகக் கொடுக்கிறார். அவ்வளவு பெரிய உபகாரம் ஆகையினாலே ஞானத்தைக் கொடுக்கிறவர் ஞான குருனாதர்! எல்லோருக்கும் குருபக்தி அவசியமாகும். குருநாதரை நினைக்க வேண்டும் வணங்கவேண்டும். குருநாதர் இருந்த திசை நோக்கி பக்தி செய்ய வேண்டும்.

மற்றொன்று அயோத தௌமியர் என்ற குருநாதர் ஒருவர் கங்கை கரையிலே இருந்தார். ஆங்கு ஒரு குருகுலம் வைத்து நடாத்தினார். அபயம் என்றால் இரும்பு: இரும்பு போன்ற உறுதியான சதையுடையவர். என்பது அவர் பெயருக்கு பொருள்.

ஓராயிரம் சீடர்கள் படிக்கிறார்கள். அவர்களிளே முதல் மாணவன் ஆருணியென்பது. அவன் பான்ஜால நாட்டு இராஜ குமாரன். அங்கேயே சாப்பாடு அக்காலத்தில் ஒருவேளைதான், இபபொழுதெல்லாம் மூன்று வேளை சாப்பாடு. ஒரு வேளை சாப்பிடுகிறவன் யோகி. இருவேளை சாப்பிடுகிறவன் போகி. மூன்று வேளை சாப்பிடுகிறவன் ரோகி. இறப்பவன். எவ்வளவு ஆகாரத்தை குறைக்கிறார்களோ அவ்வளவு சௌக்கியமாக இருப்பார்கள். ஆகாரம் அதிகமாகச் சாப்பிட்டால் துன்பப்படுவார்கள். நீண்டநாள் வாழ்வதற்கு வள்ளுவரும் வழி சொல்லுகிறார்.

> "ஆற்றல் அளவறிந்(து) உண்பான் அஃதுடம்பு
> பெற்றான் நெடிதுய்க்கும் மாறு" குறள்

அதனால் குருகுலத்திலே ஒரு வேளை தான் சாப்பாடு ஆனால் பிள்ளைகள் எல்லாம் அழகாகப் படிக்கிறார்கள்.

காலை 9 மணிக்கு பாடம் நடந்தது. ஆயோததௌமியர் அந்த இராஜகுமாரனைக் கூப்பிட்டார் "ஆருணி ! நமக்குச் சொந்தமான வயலிலே மடை உடைபட்டு வெள்ளமாகத் தண்ணீர் ஓடுகிறது, அந்த மடையை அடைத்து விட்டுவா" என்றார், இராஜகுமாரனுக்கு வயலிலே வேலை வைத்தார். நமது பிள்ளைகள் என்ன செய்யும்? "அந்தக் கோனார் பையனை அனுப்புங்கள். எனக்குப் பழக்கமில்லை" என்று சொல்லி எதிர் நீச்சல் போடுவார்கள்.

அவன் 'குரு வார்த்தைக்கு மறுவார்த்தை இல்லை' என்று, மண்ணை வெட்டி வெட்டிப் போட்டான். மடை அடைபடவில்லை. மடை உடைந்து கொண்டே இருக்கிறது.. காலை முதல் மாலை வரை வேலை செய்தான். மடை அடைபடவே இல்லை. "குருநாதன் சொன்ன வேலையை இட்ட கட்டளையை நிறைவேற்றாமல் நான் திரும்பிப் போகலாமா? இந்த சரீரம் வேண்டுமா? என்று குறுக்கே படுத்து விட்டான். அங்கு வருகின்ற தண்ணீர் அவனைத் தாண்டுவதற்கு அஞ்சி, அப்படியேஅணை மாதிரி தேங்கி நின்றது.

இரவு 8 மணிக்குப் பாடம் சொல்லித் தருகின்ற பொழுது முதலிலே உட்காருகின்ற பையனைக் காணோம். ஆருணி எங்கே? என்றார் "காலையிலே போனவன் இன்னும் காணோம்" என்றனர் மற்ற மாணாக்கர்கள். அந்தக் காலத்தில் டார்ச் லைட் கிடையாது! தீவட்டி எடுத்துக் கொண்டு போனார். அந்த வயலுக்குப் போய். "ஆருணி! என்றார் சுவாமி ! அடியேன் தண்ணீருக்குள் இருக்கிறேன்" என்றான் ஏனப்பா என்றார் காலையிலிருந்து மாலை வரை மடை அடைத்தேன். மடை அடைப்படவில்லை. மடையில் படுத்துவிட்டேன். சுவாமி! என்றார் உன்னையே தியாகம் செய்து விட்டாய். எழுந்துவா என்றார். அப்படியே கங்கையை பிளந்து கொண்டு வந்து விட்டான். அவன் தலையிலே கையை வைத்து "எல்லா ஞானமும் வந்துவிட்டது போய் விட்டு வா" என்றார் ஒரு விநாடியிலே ஞானம் கொடுத்தார். ஆச்சாரியன் கண்ணாலே பார்த்தால் ஞானம் வந்துவிடும் அப்படிப்பட்டவர்கள் தான் ஆச்சாரியர்கள்.

அடுத்த மாணவன் உபமன்யு. "உபமன்யு! இங்கே வா" என்றார் இங்கே உனக்கு சாப்பாடு போடுவதில்லை . ஆனால் உடம்பு நன்றாக இருக்கிறதே என்றார் "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" நான் போய் கிராமத்தில் பிச்சை எடுத்துச் சாப்பிடுகின்றேன்.

ஓ பக்கத்து வீட்டுச்சாப்பாடு நன்றாக இருக்கும், நான் உன்னை பிச்சை எடுக்க வேண்டாமென்று சொன்னேனா? சரி இனிமேல் பிச்சை எடுக்கிற சாப்பாட்டை இங்கேயே வைத்துவிட்டுப் போய்விடவேண்டும் என்றார். எப்படி சோதனை? பிச்சை எடுத்தார் பெருமாள் அதைப்பிடுங்கித்தின்றார் அனுமார். எப்படி வாழ்க்கை? அப்பொழுதும் உபமன்யு முகம் வாடவில்லை. குருநாதர் வயிற்றில் அடிக்கிறார். குருநாதர் சொன்னால் வேதவாக்கு.

இன்னும் ஒரு வாரம் ஆயிற்று ஆள் மொழு மொழு என்று இருக்கிறான். கொண்டுவருகிற சாப்பாடு எல்லாம் இங்கே தான் வைத்துவிட்டுப் போகிறான். ஆனாலும் உடம்பு நன்றாக இருக்கிறதே என்றான். அதற்கு உபமன்யு " இரண்டாம் தடவை பிச்சை எடுக்கிறேன்" என்றான். நீயே திரும்பத் திரும்பத் பிச்சசை எடுத்தால் மற்றவர்களுக்கு இடையூறல்லவா? இனிமேல் இரண்டாம் தடவை பிச்சை எடுக்காதே. ஏன்றார்.

இன்னும் ஒருவாரம் ஆகியும் சரீரம் வாடிப்போகவில்லை. உபமன்யு சாப்பாட்டுக்கு என்ன செய்கிறாய்.? என்றார் "கன்று பால்சாபிட்ட பிறகு பசுக்கள் தானாகப் பால் சொரிகிறது. கையில் வாங்கிச் சாப்பிடுகிறேன்" என்றான். பாலிலே ஏ, பி,சி,டி வைட்டமின்கள் எல்லாம் இருக்கிறன. கீழே போனாலும் போகட்டும் சாப்பிடாதே என்றார். எப்படி சோதனை? இந்தக்காலத்து மாணவனாய் இருந்தால் குருநாதர் ஒழிக! குருகுலம் ஒழிக! என்று கத்துவார்கள். அப்பொழுதும் உபமன்யு முகம் வாடவில்லை, ஆச்சாரியரைத் தெய்வமாக நினைத்தான்.

இன்னும் ஒருவாரம் ஆகியும் உபமன்யுவின் உடம்பு நன்றாக இருந்தது. கண்ணா! நீ என்னடா சாப்பிடுகிறாய்? என்றார். கன்றுகள் வாய் அசைக்கும் அப்போது வரும் நுரை எடுத்துச் சாப்பிடுவேன் என்றான். அதையும் சாப்பிடாதே வேறு எதையும் சாப்பிடாதே. தண்ணீரையும் குடிக்கக் கூடாது. காட்டிலேயுள்ள பச்சிலை வாடிவிட்டது. குருநாதர் பட்டினி போட்டுக் கொல்லுகிறார். தாய்சேய்யை அடித்தால் அந்தக் குழந்தை இந்திராகாந்தியிடம் போய் விசாரணைக் கமிசன் வை என்று சொல்லுமா அல்லது போலீஸ்ரேஸனுக்கு போய் ரிப்போட் செய்யுமா? அம்மா என்று அம்மாவிடத்தே தான் செல்லும் அது போல் ஆச்சாரியனாகிய ஞானத் தாய் அடிக்கிற போது குருநாதனைத் தவிர வேறு எங்கு போவான்?

மூன்றாவது நாள் பசி தாங்க முடியவில்லை அப்பொழுது வேறு எதையும் சாப்பிடாதே சாப்பிடதே என்றால் ஆகாரத்தைத் தானே குறிக்கும்?. என நினைத்தான். அங்கே இருந்த எருக்கஞ் செடியை ஒடித்து ஒடித்து அதில் வந்த பாலைக் குடித்தான். மிகவும் அதிகமான உஸ்ணத்தால் உடனே கண்கள் பொங்கி குருடாகிவிட்டன. அப்பொழுதும் ஆச்சாரியாரை மறக்கவில்லை. இரவு வந்து விட்டது வழி தெரியவில்லை. இரவு அப்படியே தடுமாறிக் கொண்டு வந்து படித்துறை இல்லாத பாழும் கிணற்றிலே விழுந்து விட்டான். விழும் பொழுதும் குருநாதா என்று விழுந்தான். அந்த அபாயத்திலும் குருநாதரை நினைக்கின்றான். அந்தக் கிணற்றிலே இருந்த செடி உயிர் தந்தது. அப்பொழுதும் குருநாதா! குருநாதா! குருநாதா என்றான். நினைத்துப்பாருங்கள் பட்டினியாக இருக்கும் போது நாம் சொல்லுவோமா?. என்று.

இரவு 8 மணி குருநாதர் பாடம் சொல்லுகிறபோது உபமன்யுவைக் காணோம் அவர் கருணைக் கடல்! உபமன்யு எங்கே? என்றார் சுவாமி அவன் மூன்று நாளாக மிகவும் வாடிவிட்டான். காலையில் போனவன் இன்னும் வரவில்லை என்றான் வேறொரு மாணவன் தீவட்டியை எடுக்க குருநாதரும் பின் தொடர்தார் உபமன்யு கண்ணா! உபமன்யு கண்ணா! என்று கூவினார் சுவாமி அடியேன் கிணற்றில் இருக்கிறேன் என்றான் ஏன் அப்பா என்று குருநாதர் கேட்டார். " எருக்கம் பால் குடித்து கண்கள் குருடாகி விட்டது குருநாதா! என்னைக் காப்பாற்றுங்கள் என்றான்.

உடனே தேவர்கள் நோயைப் போக்குகின்று தேவ வைத்தியர்களான அசுவினி தேவர்களை வரவளைக்கும் மத்திரத்தை சொல்லிக் கொடுத்தார் அதை ஜெபம் செய் கண்களுக்கு ஒளி வந்துவிடும் என்றார். கண்ணொளி வேண்டி அந்த மந்திரத்தைச் செபித்தான் சிறுவன். அசுவினி தேவர்கள் வந்தார்கள் நான் படிக்கிற பையன் கண்களுக்கு ஒளி வேண்டும் என்றான் சிறுவன். அப்படியானால் தங்கப்பிளேடிலே உள்ள பால்கோவா பாதாம்கீர் மைசூர்பாகு ஆகியன சாப்பிட ஆச்சாரியான் உத்தரவு என்றனர். இல்லை எனக்கு மனசாட்சி இருக்கிறது நான் சாப்பிட மாட்டேன் என்றான் சிறுவன். ஆப்படியானால் உனக்கு கண்ணெளி வராது என்றனர். கண்ணொளி வராது போனால் போகட்டுமே என்றான் சிறுவன். உடனே அவனது குருபக்தியை பராட்டி தேவலோகத்துச் சோம தீர்தம் கொண்டு வந்து கண்ணிலே ஊற்றினார்கள். பொன் போன்ற கண்களும் ஒளியும் கிடைத்தது.

அந்த அழகிய கண்களைப் பெற்று இந்தக் குழந்தை ஓடி வந்து குருநாதனின் கால்களில் விழுந்தான். குருநாதா! எனக்கு கண்ணொளி கிடைத்து விட்டது என்றான். "உனக்கு சாதாரண கண்கள் அல்ல மகனே முக்காலங்களிலும் நடக்கும் நிகழ்ச்சிகள் உன் கண்களுக்கு தெரியும் இந்தக் கண்களைக் கொண்டு சில அடியார்களின் வரலாறுகளை நீ சொல்" என்று சொன்னார். அவர் கையிலை மலை சாரலில் இருந்த அடியார்கள் வரலாற்றைச் சொல்லிக் கொண்டிருந்தார். என்பது வரலாறு. உபமன்யு அத்தனை பெரியவர் ஆனதற்கு காரணம்? குருபக்தி மறந்து விடாமல் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆச்சாரியாரிடம் செய்யும் குரு பக்தியைக் காட்டிலும் வேறொன்றும் கிடையாது.

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

ஏறத்தாழ ஆயிரத்து முந்நூறு வருடங்களுக்கு முன் தஞ்சை மாவட்டத்திலுள்ள சீர்காழி என்ற ஊரில் சிவபாத இருதயருக்கும் பகவதியம்மையாருக்கும் மகனாகப்பிறந்தார் சம்பந்தர்.

சம்பந்தர், தமது மூன்றாம் வயதில் ஒரு நாள் குளிக்கச் சென்ற தந்தையுடன் கூடிச்சென்றார். தந்தை குளிக்கும் போது காணாது கரையில் நின்று அழுத சம்பந்தர் முன் சிவபெருமானும் உமாதேவியாரும் தோன்றினர்.சிவபெருமான் விருப்பப்படி தேவி பொற்கிண்ணத்தில் பால் எடுத்து சிவஞானத்தை குழைத்து ஊட்டினார். பாலைக்குடித்து சிவஞானம் கைகூடியதால் திருஞானசம்பந்தர் எனப்பெயர் பெற்றார்.

பால் ஒழுக நின்ற சம்பந்தரைக் கண்ட தந்தை யார், " யார் கொடுத்த பாலைக் குடித்தாய்" என்று அதட்டினார். உடனே சம்பந்தர் 'தோடுடையசெவியன்' எனத் தொடங்கும் பதிகத்தை பாடி., பால் தந்தது எம்பெருமானே என்பதைத் தெரிவித்தார்.

சில நாட்கள் கழித்து ஊர் ஊராகச் தலயாத்திரை சென்றார். அவர் பெயர் ஊரெல்லாம் பரவியது. திருகோலக்கா என்னும் ஊரில் சிவபெருமான் அவருக்கு பஞ்சாக்கரம் பதித்த இரு பொன் தாளங்களை கொடுத்தார். அம்பிகை அதற்கு உயர்ந்த ஓசை கொடுத்தார்.

திருநனிப்பளி சென்று திருநீலகண்ட யாழ்ப்பாணரைச் சந்தித்தார். பின் திருநெல்வாயிலரத் துறைக்குச் செல்லும் வழியில், மாறன்பாடியில் எம்பெருமான் சம்பந்தருக்கு முத்துப்பல்லக்கும் முத்துக்குடையும் கொடுத்தனர்.

உபனயம் நடந்த அன்று பஞ்சாக்கர பதிகம் பாடினார். சில நாட்கள் அப்பர் சுவாமிகளுடன் கூடியும் சில் இடங்களுக்கு சென்றார். திருப்பாச்சிலாச்சரமம் சென்றபோது, அரசன் கொள்ளிமழவனின் மகளுக்குக் குற்றமுயலகன் என்னும் நோயை தீர்த்தார். பின் கொடி மாடச் செங்குன்றூர் சென்று, அந்த ஊரில் முன்பனிக் காலத்தில் வரும் விசச் சுரத்தை தீர்த்தார்.

திருப்பட்டீச்சுரத்தில் முத்துப்பந்தல் பெற்றார். திருவாவடு துறையில் தந்தையாரின் வேள்விக்காக கோவிலில் பாடி ஆயிரம் பொற்காசுகள் பெற்றார். திருகருகல் என்னும் ஊரில் பாம்பு கடித்து இறந்த வணிகனை உயிர்பித்தார்.

சம்பந்தரும், அப்பருமாக திருவீழிமிழலை சென்றனர். பஞ்சம் நீங்க இறைவனைப் பாடி படிக்காசாகப் பொன் காசு பெற்று மக்கள் பசி போக்கினார். திருமறைக்காடு என்ற

ஊர்க்கோவிலின் கதவு அடைத்தே கிடந்தது. சம்பந்தர் பாடி அதை திறக்கும்படி செய்தார். அங்கே தங்கியிருக்கும் போது ஒரு நாள் பாண்டி நாட்டு அடியார்கள் சிலர் வந்து சம்பந்தரிடம் "ஐயனே எங்கள் நாட்டில் சமணம் வேரூன்றிவிட்டது. அரசனும் சமணனாகி விட்டார். இந்நேரத்தில் சைவத்தை வாழவைக்க தங்களாளே முடியும் என்று கருதி அரசியாரும், மந்திரியாரும் தங்களை அழைத்து வரும்படி எங்களை அனுப்பினார்கள்" என்று கூறினர். சம்பந்தரும் உடனே புறப்பட்டார். அப்பர் நாளும் கோளும் சரியில்லை எனக் கூறித் தடுத்தார். சம்பந்தர் " அவை நல்ல நல்ல அடியார்க்கு மிகவே" என்று கூறிச்சென்றார்.

சம்பந்தர் மங்கையர்க்கரசியும், மந்திரி குலச்சிறையும் எதிர் கொண்டழைக்க ஒரு மண்டபத்தில் சென்று தங்கினார். அரசன் சம்மதத்தோடு சமணரும் மந்திரத்தால் மடத்தை எரிக்க முயன்றனர்.அது நிறைவேறாமல் போகவே தீப்பந்தங்களால் கொழுத்தினர். மடம் பற்றி எரிந்தது. சமபந்தரும் அந்தத் தீ பையவே சென்று பாண்டியற்காகவே என்ற பதிகம் பாடினார். தீ அடங்கியது. ஆனால் அரசனுக்கு வெப்புநோய் பற்றியது.

அரசனின் நோய் சமணர்களின் மந்திரங்கள் ஒன்றினாலும் தீரவில்லை. சம்பந்தர் அழைக்கப்பெற்றார். அரசனின் இடது பக்க நோயை சமணர்கள் தீர்ப்பதென்றும் வலது பக்க நோயை சம்பந்தர் தீர்ப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது. சமணர்களின் மந்திரமோ அவர்கள் மயில்பீலி கொண்டு தடவியதோ ஒன்றும் பலிக்கவில்லை. நோய் திவீரமாகியதே தவிரத் தணியவில்லை. வலது பக்கத்தில் சம்பந்தர் "மந்திரமாவது நீறு" என்னும் பதிகம் பாடி நோயைத் தீர்த்தார். அரசன் வேண்டுகோளுக்கிணங்கிய சுவாமிகள் இடப்பக்க நோயையும் தீர்த்தார். மன்னனும் மற்றோரும் மகிழ்ந்தனர்.

பின்னர் சமணர்களும் சம்பந்தரும் தத்தம் சமய உண்மைகளை எழுதி தீயில் இட்டனர். அதில் சம்பந்தரின் ஏடுமட்டும் எரியாமலிருந்தது. அது போல் ஆற்று வெள்ளத்தில் இட்டபோது சம்பந்தரின் ஏடு மட்டும் வெள்ளத்தின் போக்கை எதிர்த்துச் சென்றது. சமணர்கள் விரும்பிய தண்டனை பெற்றனர். கூன் பாண்டியன் சம்பந்தரிடம் விபூதி பெற்று பூசி நின்ற சீர் நெடுமாறனாயினார்.

திருக்கொள்ளம்புதூரில், ஓடம் ஓட்ட ஆளில்லாமல், சம்பந்தர் பாடியே ஓடத்தைச் செலுத்தினார். திருவோத்தூரில், ஒரு சிவனடியார் நடுகின்ற பனை மரங்களெல்லாம் ஆண் மரங்களாகவே இருந்தன, சம்பந்தர் அவற்றை பெண் பனைகளாக்கி காய்கச் செய்தார். மைலாப்பூரில் சிவனேசச் செட்டியார் என்பவரின் மகள் பூம்பாவை பாம்பு கடித்து இறந்தாள். சம்பந்தரின் பெயரிலுள்ள நம்பிக்கையால் அவளை எரித்த சாம்பலை பாதுகாத்து வைத்திருந்தார். சம்பந்தர் வந்து " மண்டியிட்ட புன்னை" எனும் பதிகம் பாடி அவளை எழுப்பினார் பின்னர் ஆச்சாள்புரம் என்ற ஊரில் வாழும் நம்பியாண்டார் நம்பியின் மகளைத் திருமணம் செய்து, மணம் காண வந்தோருடன் சோதியில் ஐக்கியமானார். இவர் பதினாறாம் வயது வரைதான் வாழ்ந்தார் என்பர்.

### சம்பந்தர் பாடலின் அற்புதம்:

புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனார்தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென்று இருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே
பழைய என்பொற் பாலைய தாக்குமே
சினவ ராவிடம் தீரெனத் தீருமே
செய்ய சமபந்தர் செந்தமிழ்ப் பாடலே.

# தமிழ்த் தாய் மண்ணே வணக்கம். (சென்ற இதழ் தொடர்ச்சி)

இந்திய வரலாற்றையும், இந்தியாவின் மிகப் பழமையான மொழியாகிய தமிழையும் அங்குவந்த ஆங்கிலேயர்கள் நன்கு கற்கவில்லை. பண்டைய நாகரீகம், கலை சமயம் ஆகியவையின் இருப்பிடம் தெற்கும் வடக்கும் என்பதை நன்கு உணரவில்லை.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின் புதைபொருள் ஆராய்ச்சியின் பயனாகப் பல உண்மைகள் புலப்படுகின்றன.தமிழ் இனத்தின் பெருமையையும் வரலாற்றையும் இந்திய வரலாற்றில் இருந்து பிரிக்க முடியாது. ஆங்கு வாழ்ந்தவர்களும் ஆண்டவர்களும் திராவிடரே. பழைய கற்காலத்தில் (கி.மு.4000-35000) திராவிட மக்கள் இந்தியாவில் சிறப்பாக வாழ்ந்தனர். இவர்கள் பயன்படுத்திய கற்குகைகள் மற்றும் கற்கோடரிகள் போன்றவை தென்னிந்தியாவில் உள்ள மதுரை தஞ்சை வடஆற்காடு செங்கற்பட்டு திருச்சி பெல்லாரி குர்நூர் நெல்லூர் மைசூர் ஐதராபாத் முதலிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. புதிய கற்காலத்தில் (கி.பி 35000-10000) மக்கள் நிலையான வாழ்க்கை நடத்தினர். உழவுத்தொழில் நூல் நூற்றல்(நெசவு) மண்சட்டிபானை வனைதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டுச் செவ்வனே வாழ்ந்தனர். ஆன்மீகத்துறையிலும் ஈடுபாடு காட்டினர்.

தலைச்சங்க காலமும் இடைச்சங்க காலத்தின் முதற்பகுதியும் புதுக்கற்காலம் ஆகும். இதை தொல்காப்பியமும் சிறப்பாகக் கூறுகின்றது. வால்மீகி விசுவாமித்திரர் அகத்தியர் மனு என்பவை பண்டைக்கால திராவிடப்பெயர்களே.

இராமாயண காலத்தில் இந்தியா முழுவதிலும் வாழ்ந்த மக்கள் திராவிடர் ஆவார். பேசப்பட்ட மொழியோ பண்டைத்திராவிடம் அல்லது பண்டைத்தமிழ். இலங்கை முதல் இமயம்வரை பரவியிருக்கும் மக்களில் பெரும் பகுதியினர் திராவிடப் பரம்பரையே என்றும் பிற்காலத்தில் வந்த ஆரியருடனும் சிரியருடனும் ஓரளவு கலப்புற்றனர் என்றும் ஆராய்ச்சி செய்த பேராசியர்கள் தெரிவிக்கின்றனர்.

பண்டைய இந்திய மக்களைத் திராவிடர் என்றும் ஈரான் மத்திய ஆசிய போன்ற இடங்களிலிருந்து வந்து குடியேறிய காக்கேசியரின் சந்ததியினர் ஆரியர் என்றும் கருதப்பட்டனர். ஆரியன் என்றால் பெரியோன் பழைமையானவன் நாகரிகம் பண்பாடுடையவன் என்றும் சொல்லப்படுகின்றது.திராவிடர் என்பதை மறந்து கன்னடம் தெலுங்கு மராட்டிய மொழி பேசுவோர் தம்மை ஆரியரென்றும் சொல்கின்றனர். தமிழ் என்ற சொல் வடமொழியாகிய தரமிளம் என்ற சொல்லிலிருந்து பிறந்ததென்றும் அதன் கருத்து துரத்தப்பட்டவர் என்றும் சில வடமொழியாளர்கள் கூறுகிறார்கள்.

தொடரும்
அன்புடன் க.கு.

ஓம் சிவசக்தி ஓம்

# முத்தமிழ் யோகம்

தமிழின் முப்பெரும் பிரிவுகள் இயல் இசை நாடகம் என இலக்கண இலக்கிய மரபு வகுக்கும் என நாம் அனைவரும் அறிவோம். அதாவது தமிழ்த் தாயின் குழவிகள் பாட்டும் பண்ணும் பாவனையும் ஆகும்.

இயல் என்பது வசனமும் செய்யுளும். இசை என்பது ராகமும் தாளமும். நாடகம் என்பது நடனம் நாட்டியம் நடிப்பு. தத்துவமுறையிற் தத்துவமாணவர் கண்ணுடாகக் காணும் கருத்தினைச் சிறிது பார்ப்போம். இயல் என்பது இயல்பு - இயற்கை - இயற்கை நியதி. எது எது எப்படி எப்படி நடக்கிறது என்ற காரிய காரணங்களை ஆராய்ந்து அறிதல். அது அது அப்படியே நடக்கும் என்ற போக்கைப் புரிந்து கொள்ளுதல். இதுவே இயற்கை நியதி, இயல்பு, இயல்.

இசை என்பது இசைந்து கொள்ளுதல்., ஒத்துப்போதல். ஏன் இயல் போடு இசைந்து வாழவேண்டும்? கடுங் காற்றடிக்கையில் நாணற்புல்லு அதனோடு இசைந்து நெளிந்து கொடுப்பதனால், பெரும்புயலையும் தாங்கி தன்னையும் காத்து பிறபிராணிகட்கும் உதவுகிறது.

நாடகம் என்பது – நாடு + அகம். நாடு – நாடிச்செல் தேடிச்செல். அகம் - உள், உள்ளே, உள்ளம். மேலும் அகம் என்பது வீடு – மோட்சம்.

In order to get to heaven, do we get on a rocket or a space probe and start looking all around and search all over the sky? No. We have to seek the Self within, seek the Truth, subconscious, conscious, super conscious and supreme conscious.

நம் குருமார்கள் காட்டிய வழியும் இதுவே ஆகும். ஈழத்துத் தவமுனியாம் யோகர் சுவாமிகளும் நற்சிந்தனையில் இதை வலியுறுத்தியுள்ளார். அவரது பரம சீடரான சற் குரு சுப்பிரமுனிய சுவாமிகளும் பேர் ஒளியாய் இருந்து நாடுவோர்க்கெல்லாம் இத்தத்துவத்தைத் தெளிவூட்டினார். இப்படிப்பட்ட மகாத்மாக்கள் நமக்காகவே பிறந்து நம் வாழ்வு நலம் பெறத் தாம் மகாதவம் செய்து ஆத்மீக மார்க்கத்தில் உலகையும் ஒருபடி உயர்த்தி மறைகின்றனர். வன்கூவர் மகாநகரில் உள்ள பொதுமக்களுக்குரிய, தொண்டர்களால் நடாத்தப்படும் அருள்மிகு துர்க்கா தேவி ஆலயத்திற்கு இருமுறை நேரில் வந்தும், தொடர்ந்தும் இடைவிடாது ஆசியைவழங்கிக் கொண்டிருக்கின்றார் சுப்பிரமுனிய சுவாமிகள். அப்படிப்பட்டவரது பூதவுடல் நம்மைவிட்டுச் சென்றது – அவர் மகாசமாதி எய்தியது – கவலைக்கிடமான சம்பவம் இல்லையாயினும், இல்லறத்தாராகிய நமக்கு அவரது மறைவை நினைவு கூறும்போதெல்லாம் வருத்தமாகத்தான் இருக்கின்றது.

From the words of the Master – Yogar Swami of Ealam for the students of life:

Fundamental principles of all religions are one and same, all the dissimilarities seen at the bottom of the path, disappears as you reach the top of the mountain.

You must not come to the conclusion that there are no stars, just because you are unable to see stars in daytime.

You lack nothing. The only thing you lack is that you do not know who you are.

It is not possible to straighten the kink in a dog's tail; let us improve ourselves instead of trying to improve the world.

You may remain separate like the fingers; but when there is work to do, co-operate in doing it like the hands.

Mind is our best friend and our worst enemy.

ஓம் சிவசக்தி ஓம்

## ஆலய பூசை நேரங்கள்

தினம் தோறும் மதிய நேரப்பூசை பகல் 12.00 மணிக்கு நடைபெறும்

தினம் தோறும் இரவு நேரப்பூசை இரவு 7.30 மணிக்கு நடைபெறும்

இராகு காலப் பூசை பிரதி செவ்வாய் தோறும் பகல் 2.00மணிக்கு நடைபெறும்.

## ஆலயத்தில் அடுத்த மூன்று மாதங்களுக்கு நடை பெற இருக்கும் விசேட தினங்கள்.

| | | |
|---|---|---|
| 02-08-2002 | வெள்ளிக்கிழமை | ஆடிக் கார்திகை விரதம் |
| 08-08-2002 | வியாழக்கிழமை | ஆடி அமாவாசை |
| 10-08-2002 | சனிக்கிழமை | திருவாடிப்பூரம்/ தேர்த் திருவிழா |
| 13-08-2002 | செவ்வாய்க்கிழமை | ஆடிக் கடைசி செவ்வாய் |
| 16-08-2002 | வெள்ளிக்கிழமை | வரலக்சுமி விரதம் |
| 17-08-2002 | சனிக்கிழமை | ஆவணி மாதப் பிறப்பு |
| 18-08-2002 | ஞாயிற்றுக்கிழமை | ஆவணி 1ஆம் ஞாயிறு |
| 22-08-2002 | வியாழக்கிழமை | பூரணை விரதம் |
| 25-08-2002 | ஞாயிற்றுக்கிழமை | ஆவணி 2ஆம் ஞாயிறு |
| 26-08-2002 | திங்கட்கிழமை | மஹா சங்கடஹர சதுர்த்தி |
| 29-08-2002 | வியாழக்கிழமை | கார்த்திகை விரதம் |
| 30-08-2002 | வெள்ளிக்கிழமை | ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி |
| 01-09-2002 | ஞாயிற்றுக்கிழமை | ஆவணி 3ஆம் ஞாயிறு |
| 04-09-2002 | புதன்கிழமை | பிரதோஷ விரதம் |
| 06-09-2002 | வெள்ளிக்கிழமை | சர்வ அமாவாசை விரதம் |
| 08-09-2002 | ஞாயிற்றுக்கிழமை | ஆவணி 4ம் ஞாயிறு |
| 10-09-2002 | செவ்வாய்க்கிழமை | விநாயகர் சதுர்த்தி |
| 11-09-2002 | புதன்கிழமை | ஷஷ்டி விரதம் |

| | | |
|---|---|---|
| 14-09-2002 | சனிக்கிழமை | ஆவணி மூலம் |
| 15-09-2002 | ஞாயிற்றுக்கிழமை | ஆவணி கடைசி ஞாயிறு |
| 17-09-2002 | செவ்வாய்க்கிழமை | புரட்டாதி மாதப்பிறப்பு |
| 21-09-2002 | சனிக்கிழமை | புரட்டாதி 1ஆம் சனி |
| 24-09-2002 | செவ்வாய்க்கிழமை | சங்கடஹர சதுர்த்தி |
| 26-09-2002 | வியாழக்கிழமை | கார்த்திகை விரதம் |
| 28-09-2002 | சனிக்கிழமை | புரட்டாதி 2ஆம் சனி |
| 05-10-2002 | சனிக்கிழமை | புரட்டாதி 3ஆம் சனி |
| 06-10-2002 | ஞாற்றுக்கிழமை | நவராத்திரி ஆரம்பம் |
| 0-10-2002 | புதன்கிழமை | சதுர்த்தி விரதம் |
| 10-10-2002 | வெள்ளிக்கிழமை | ஷஷ்டி விரதம் |
| 12-10-2002 | சனிக்கிழமை | புரட்டாதி கடைசிச் சனி |
| 14-10-2002 | திங்கட்கிழமை | சரஸ்வதி பூசை |
| 15-10-2002 | செவ்வாய்க்கிழமை | விஜயதசமி |